www.newwisdomministries.com

# ஞானஒலி





# கொடுக்கும் கரங்கள் இறைக்கரங்கள்

ஞானம் 6 – ஒலி 20 – 14.05.2023

# உதவாதவன் உதவாக்கறை





## தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

உயிர்களைப் படைத்து அவற்றை உயிராய் அன்பு செய்து, உயிர் கொடுத்து மீட்டதோடு தன் ஆவியையும் நமக்குத் தந்து எந்நாளும் நம்மோடு சுக துக்கங்களில் உடனிருக்கும் நம் அருள்நாதர் இயேசுவின் இனிய நாமத்தில் ஞான ஒலி மின்னதழின் வாசக அன்பர்களுக்கு என் அன்பான நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்கின்றேன்.

இறைவனின் சாயலிலே படைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும், அவரைப் போல சக உயிர்களின் மீது பரிவும், அக்கறையும் கொள்ள வேண்டும் என்பதே நம் இயல்பு.

ஈவதே உயிரின் இயல்பு. சக உயிர்களின் மீதுள்ள இந்த அன்பே இந்தப் பிரபஞ்சத்தின் இயக்க சக்தி, விதி. அத்தகைய அக்கறையே இந்த உலகத்தை பரிணமிக்கச் செய்கின்றது. அதனால்தான் இங்கு உயிர்களின் நீச்சி நடைபெறுகின்றது.

உதவாத உயிர்கள் உதவாக்-கறை என்றே எண்ணப்படும். உதவுதே உயிர்கள் உயிருடன் இயங்குகின்றது என்பதன் அடையாளமாகும்.

முதலில் உன் உயிரை அன்பு செய், அதனைப் பேணி வளர். அதன் பிறகு, நீ பிற உயிர்களை அதேபோல் அன்பு செய் என்பதே இயேசுவின் முதல் அறிவுரை. அதுவே அன்பின் அடித்தளம்.

புகை பிடித்து, பான்பராக், துரித உணவு சாப்பிட்டு, மது அருந்தி, தூக்கம் கெடுத்து அலைபேசி பார்த்து உடலைத் துன்புறுத்திக் கெடுப்பவர்கள், தன்னையே அன்பு செய்யாதவர்கள் எப்படி பிறரை அன்பு செய்ய முடியும்.

அன்பு முதலில் தன்னிடமிருந்தே துவங்க வேண்டும். அன்பு முதலில் பிறக்கும் இடத்தில் போற்றப்பட வேண்டும். அது சரியாக இருந்தால்தான் அது சேரும் இடமும் நலமாய் இருக்கும். ஆகவேதான் இயேசு பெருமான் அன்பு சுயத்திலிருந்து தொடங்கவேண்டும் என்று கூறினார்.

அந்த சுய அன்பு தன்னைக் கடந்து பிறரை அன்பு செய்ய ஆரம்பித்து அதில் நிறைவு காணும் நிலை வரும்போது, அது தன்னிலை மறந்து பிறரின் நலனிலேயே தன்னை அழித்துக் கொள்ளும்.

ஆகவேதான் இயேசு மேலான அன்பு என்ன என்பதை நமக்காகத் தன் உயிரைக் கொடுத்து கற்பித்தார்.

குழந்தைக்காக ஒரு பெண் தன் அழகு, வடிவம், அனைத்தையும் இழக்கும்போது தாய்மை என்ற இறைத்தன்மையை

அடைகின்றார். அந்தத் தாய்மையில்தான் அன்பு தன் உச்சபட்ச பரிணாமத்தை அடைகின்றது.

அதனால் சான்றோர் மக்கள் பணியிலே தன்னை இழக்கின்றார்கள். அதற்காக எதையும் இழக்கத் துணிகின்றார்கள்.

புனித.அன்னை தெரேசா அவரது சபை அவரை வெளியே அனுப்பியபோது, அதையும் ஏற்று வெளியே வந்தார். ஆனால் அவர் அணிந்த அன்பு அவரை புனிதையாக்கியது.

அதுவே இயேசுவின் வழி. அதுதான உண்மையின் வழி.

பிறரன்பில் இன்பம் காணும் அனைவரும் எந்தக் காரணத்திற்காகவும் மாற்று வழியில் செல்வதில்லை.

உலகப் புகழ் பெற்ற கவிஞர் ஜார்ஜ் ஹெர்பர்ட் இங்கிலாந்தைச் சேர்ந்தவர். அவர் ஒருமுறை சிறப்பு விருந்தினராக ஒரு இசைக் கச்சேரிக்கு அழைக்கப்பட்டிருந்தார். அக்கச்சேரிக்குப் போகும் வழியில், ஒரு குதிரை வண்டி, நிற்பதையும், அதிலிருந்து விழுந்துவிட்ட பொருட்களை ஏழையான அந்த வண்டிக்காரர் சிரமப்பட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டிருந்தார். உடனே ஜார்ஜ் வண்டியிலிருந்து இறங்கி அந்த வண்டிக்காரரோடு சேர்ந்து அத்தனை பொருட்களையும் எடுத்து அந்த வண்டியில் ஏற்றிவிட்டு, அவருக்கு சொற்ப பணத்தையும் கொடுத்து பத்திரமாக போகச் சொன்னார். அவருக்கு உதவி செய்ததால், ஜார்ஜ் அவர்களின் உடைகள் மிகவும் அழுக்கடைந்து விட்டன....அதைப் பொருட்படுத்தாமல், அவர் அந்த கச்சேரிக்குத் தாமதமாகப் போய்ச் சேர்ந்தார். விழாவிற்கு வந்திருந்தவர்கள் அவரையும், அவரது அழுக்கடைந்த உடையையும் கண்டு, முகம் சுழிந்து, என்ன இப்படி அழுகான உடையில் வந்திருக்கின்றீர்கள், என்ன நடந்தது என்று அவர்கள் கேட்டார்கள். அவர் வழியில் நடத்ததை விவரித்தார். உங்களின் தகுதி, தரம் என்ன? நீங்கள் போய் இப்படியான வேலையைச் செய்யலாமா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், நான் மனிதம் போற்றுகின்றேன். அதற்கு முன், எதுவும் எனக்குப் பெரிதில்லை. பிறருக்கு உதவக் கூடிய தருணத்தை எப்போதும் இழந்துவிடக்கூடாது. இல்லையென்றால் நாம் நமது மனச்சாட்சியின் சவுக்கடிக்கு தப்பவே முடியாது.

பிச்சை போடும்போது நியாய தர்மம், பார்ப்பவர், அறிவுரை கூறுபவர்கள்...மனிதம் கற்கவில்லை என்றே அர்த்தம்.

உதவுக்கூடிய வாய்ப்பு கிடைக்காவிட்டாலும், உண்டு பண்ணுபவரே இறை மனிதர்கள்.

எழுத்தாளர் கல்கியின் குருநாதர் திரு.வி.கல்யாண சுந்தரனார். குருவின் மீது கொண்ட பக்தியால்தான் கிருஷ்ணமூர்த்தி என்ற தனது பெயரை குருவின் முதல் இரண்டு எழுத்தோடு தனது பெயரின் முதல் எழுத்தையும் சேர்த்து கல்கி என்று மாற்றிக் கொண்டார். திரு.வி.க வறுமையில் வாடியதோடு நோய்வாய்ப்பட்டு மிகவும் துன்பப்பட்டார். கல்கி அவருக்கு பண உதவி செய்தபோது அதை மறுத்துவிட்டு, தனது புத்தகங்களின் விற்பனை வழியாக வரும் பணமே போதும் என்று வைராக்கியமாக இருந்தார். பிறரின் வழியாக அவர் உதவிகளை ஏற்பாடு செய்தும் அவற்றை அவர் மறுத்தார். அரசாங்க உதவிகளையும் அவர் ஏற்கவில்லை. அவரது 75 வயதை சிறப்பிக்க கல்கி ஒரு விழாவை ஏற்பாடு செய்து அதன் மூலம் ஒரு பெரும் தொகையை வசூலித்து, பாராட்டுப் பத்திரத்தோடு அத்தொகையை அவருக்கு கொடுத்தபோது, பணத்தை அவர் ஏற்கவில்லை இறுதிவரைக்கும் அவர் தனது தன்மானத்தை விட்டுக் கொடுக்கவில்லை.

இவ்வளவு வறுமையில் வாடும் தன் குருவிற்கு எதாவது செய்து அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்பிய கல்கி அவர்கள்...திரு.வி.க அவர்களின் புத்தகங்களை பெருமளவு வாங்கி அவற்றை பிறருக்கு அன்பளிப்பாக வழங்கினார். அதன் மூலம் தன் குரு விரும்பியவாறு அவரது புத்தக விற்பனையால் வந்த பணத்தில் நலமாக இருக்கட்டும் என்று ஒரு நல்ல மாணவராக, கல்கி தன் குருநாதருக்கு உதவினார் என்ற செய்தி...நம் தலையங்கத்தின் மையக் கருத்தை மேலும் அர்த்தமுள்ளதாக்கி இருக்கின்றது.


பிறரின் நலனில் அக்கறையுள்ள உள்ளம், எதற்கும் தயாராய் இருக்கும். அத்தகைய வாய்ப்பு இறைவன் தரும் மீட்பின் தருணம்.

செபிக்கும் உதடுகளைவிட, உதவும் கரங்கள் புனிதமானவை.

90

# விவிலியம் அறிவோம்





## சீனாய் பாலைவனத்தில் இஸ்ரயேல் மக்கள்

எகிப்திலிருந்து வெளியேறிய இஸ்ரயேல் மக்கள் சீனாய் மலையை வந்தடைந்தபோது சிதறிய ஒரு கூட்டமாக இருந்தார்கள். ஆனால் ஏறக்குறைய ஒரு வருடத்திற்குப் பிறகு சீனாய் மலையைவிட்டு, பாலைவனத்தில் பயணத்தைத் தொடர்கையில் அவர்கள் ஒரு கூட்டமைப்பாக மாறியிருந்தார்கள். அவர்களுக்கென சட்டதிட்டங்கள் இருந்தன; வழிபாட்டுச் சடங்குகள் பற்றிய ஆவணங்கள் இருந்தன. மற்றும் அவர்களை வழிநடத்திச் செல்வதற்குக் குலத்தலைவர்கள் மற்றும் குடும்பத் தலைவர்கள் இருந்தார்கள். இஸ்ரயேல் என்ற கூட்டமைப்பு யாக்கோபின் பன்னிரு மகன்களைக் குலத்தலைவர்களாகக் கொண்டு உருவாக்கபட்ட பன்னிரு குலங்களின் கூட்டமைப்பு. இஸ்ரயேல் மக்கள் சீனாய் பாலைவனத்தில் தங்கியிருக்கையில் லேவியர் குலம் திருஉறைவிடப் பணிக்காகக் கடவுளால் தேர்வு செய்யப்பட்டது. எனவே மற்ற குலங்களிலிருந்து அவர்கள் தனியாகப் பிரிக்கப்படுகிறார்கள். அதன் காரணமாக இஸ்ரயேல் கூட்டமைப்பில் ஒரு குலம் குறைந்தது. அதை ஈடு செய்வதற்காக யோசேப்பின் குடும்பம் அவரது இரண்டு மகன்களான எப்பிராயீம் மற்றும் மனாசே பெயர்களில் இரண்டு குலங்களாக மாற்றப்பட்டன. யோசேப்பின் வழி மரபினர் இஸ்ரயேல் கூட்டமைப்பில் இரண்டு குலங்களாகக் கருதப்பட்டதால் யோசேப்பு உரிமைச் சொத்தில் இரண்டு மடங்கு பெறுகிறவராகிறார். அதன் வழியாக தலைமகன் உரிமையை அவர் பெறுகிறார். இது யோசேப்பிற்குக் கிடைத்த தனிச் சிறப்பாகும்.

சீனாய் மலை உடன்படிக்கைக்குப் பின் சீனாய் பாலைவனத்தில் இஸ்ரயேல் மக்கள் தங்கியிருக்கையில் அங்குமிங்குமாக அவரவர் விருப்பம்போல் கூடாரம் அடித்து வாழவில்லை. மாறாகப் போருக்குச் செல்பவர்கள் வீயூகம் அமைத்துப் போரை எதிர்கொள்வதுபோல

இஸ்ரயேல் மக்களும் போருக்காக தயாராக இருப்பதுபோல் போர் வீயூகம் அமைத்து பாளையமிறக்கித் தங்கியிருந்தார்கள். ஆண்டவரை மையமாகக் கொண்டு அவர்களின் வாழ்க்கை அமைக்கப்பட்டிருந்ததால் பாளையத்தின் நடுவில் ஆண்டவர் தங்குகின்ற திருஉறைவிடம் அமைக்கப்பட்டது. கிழக்குப் பகுதியில் திருஉறைவிடத்தின் முன்பகுதியில் மோசே, ஆரோன் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் தங்கினர். திருஉறைவிடத்தின் வாசல் பகுதியில் தங்குவதற்கு அவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பு தனிச் சிறப்பு வாய்ந்தது. இஸ்ரயேலின் பன்னிரு குலங்களும் திருஉறைவிடத்தைச் சுற்றி ஒவ்வொரு திசையிலும் மூன்று மூன்று குலங்களாக பாளையமிறக்கினார்கள். உதாரணமாக திருஉறைவிடத்தின் கிழக்குப் பகுதியில் யூதா, இசக்கார் மற்றும் செபுலோன் குலங்களும், தெற்குப் பகுதியில் ரூபன், சிமியோன் மற்றும் காத்து குலங்களும், மேற்குப் பகுதியில் எப்பிராயீம், மனாசே மற்றும் பென்யமின் குலங்களும், வடக்குப் பகுதியில் தாண், ஆசேர் மற்றும் நப்தலி குலங்களும் திருஉறைவிடத்தைச் சூழ்ந்து பாளையமிறக்கினார்கள். இஸ்ரயேல் மக்களில் போருக்குச் செல்லத்தக்கவர்கள் கணக்கெடுக்கப்பட்டபோது லேவியர்கள் எண்ணப்படவில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால் லேவியர்கள் தனியாக எண்ணப்பட்டார்கள். அவர்கள் கெர்சோனியர்கள், கோகாத்தியர்கள் மற்றும் மெராரியர்கள் என மூன்று மூதாதையர் குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டார்கள். லேவியர் குலத்திலுள்ள மூதாதையர் குடும்பங்களின் தலைவர்களுக்குத் தலைவராக ஆரோனின் புதல்வரான எலயாசர் நியமிக்கப்பட்டார் (எண் 3:32). திருஉறைவிடத்தைச் சுற்றிப் பாளையமிறக்கிய பன்னிரு குலங்களின் நடுவிலும் குருக்களும் லேவியர்களும் தங்கினார்கள். மோசேயும், ஆரோனும் அவர்களின் குடும்பத்தினரும் கிழக்குப் பகுதியில் திருஉறைவிடத்தின் முன்பகுதியில் தங்கினார்கள் எனப் பார்த்தோம். தெற்குப் பகுதியில் லேவியரான கோகாத்தின் புதல்வர்களும், மேற்குப் பகுதியில் லேவியரான கெர்சோனின் புதல்வர்களும், வடக்குப் பகுதியில் லேவியரான மெராரியும் அவருடைய புதல்வர்களும் பாளையமிறக்கினார்கள். திருஉறைவிடத்திற்கும் சுற்றிவாழ்ந்த இஸ்ரயேல் குலங்களுக்கும் இடையில் அவர்கள் தங்கினார்கள். குருக்கள் மற்றும் லேவியர் தவிர வேறு யாரும் திருஉறைவிடத்தை நெருங்கி வரக்கூடாது என்பதற்காகவே பாளையத்தின் அமைப்பு இவ்வாறு இருந்தது. திருஉறைவிடத்தைச் சுற்றித் தங்கள் கூடாரங்களை அமைத்த லேவியர்கள் திருஉறைவிடத்திற்குப் பாதுகாப்பாகவும், அதன் புனிதத்தன்மை கெட்டுவிடாமல் இருப்பதற்கு குருக்கள் மற்றும் லேவியர்களைத் தவிர வேறு யாரும் அருகில் வராமலும் பார்த்துக் கொண்டார்கள். லேவியர்களின் முக்கியப் பணி திருஉறைவிடத்தை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவதாக இருந்தது. மேலும்

அவர்கள் வழிபாடுகளில் குருக்களுக்கு உதவியாளர்களாவும் செயல்பட்டார்கள். ஆயிரக்கணக்கான இஸ்ரயேல் ஆண்கள் போருக்கு அணி வகுத்தவர்களாக பாளையமிறக்குவது வாக்களிக்கப்பட்ட நாட்டை விரைவில் வெற்றி கொள்வார்கள் என்ற நம்பிக்கையைக் கொடுப்பதாக உள்ளது. அதேவேளையில் லேவியர் குலத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த பணிகளைப் பார்க்கையில் பொற்கன்றுக்குட்டி நிகழ்வுபோல இன்னொரு நிகழ்வு நடக்கக்கூடாது என்ற சிந்தனை இருப்பதும் தெளிவாகத் தெரிகிறது.

பொற்கன்றுக்குட்டி நிகழ்விற்குப் பின் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதை நாம் அறிவோம். குறிப்பாக பல புதிய சட்டதிட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. கடவுளுக்கும் மக்களுக்கும் இடையில் நடுவர்களாகச் செயல்படவும், திருஉறைவிடத்தில் வழிபாடுகளைச் செய்யவும் லேவியர் குலத்தவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இஸ்ரயேல் மக்கள் மீண்டும் பாவத்தில் விழாமலிருக்க கடவுளின் பாதுகாப்பு தேவைப்படுகிறது. எனவேதான் இஸ்ரயேல் மக்களின் பாளையத்தில் திருஉறைவிடம் அமைக்கப்படுவது கடவுளின் பார்வையில் இஸ்ரயேல் மக்கள் இருக்கவேண்டும் என்பதைக் காட்டுவதாக உள்ளது. இப்பகுதியில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று உள்ளது. இஸ்ரயேலின் தலைப்பேறுகளும் லேவியர்களும் கணக்கெடுக்கப்படுகிறார்கள். இஸ்ரயேலின் தலைப்பேறுகளுக்குப் மாற்றாக லேவியர்கள் கடவுளுக்காக அர்ப்பணிக்கப்படுகிறார்கள் (எண் 3:40-51). இதன் பொருள் என்னவென்றால் லேவியர்கள் செய்ய இருக்கின்ற குருத்துவப் பணி இதுவரை இஸ்ரயேலின் தலைப்பேறுகளின் உரிமையாக இருந்தது. குறிப்பாக, சீனாய் மலையில் உடன்படிக்கைச் சடங்கின்போது மோசேக்கு உதவியாக விலங்குகளைப் பலியிட்டவர்கள் இஸ்ரயேல் குலங்களின் தலைப்பேறுகள்தான். சீனாய் பாலைவனத்தில் பொற்கன்றுக் குட்டியை வழிபட்ட நிகழ்விற்குப் பிறகுதான் லேவியர்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இஸ்ரயேலின் ஏனைய குலங்கள் குருத்துவ பணியிலிருந்து விலக்கப்படுகிறார்கள். உடன்படிக்கைப் புதுப்பிக்கப்பட்டாலும் கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையில் ஒருபெரிய இடைவெளி பாவத்தினால் உருவாக்கப்பட்டுவிட்டது என்பது இதன் மூலம் தெரிகிறது.

இஸ்ரயேல் மக்கள் சீனாய் பாலைவனத்தைவிட்டு வெளியேறி வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிப் பயணத்தைத் தொடங்கியபோது அவர்கள் வரிசையாக ஒரு கட்டமைப்பைக் கொண்டவர்களாகச் செல்கிறார்கள். யூதா குலத்தவர் முதலில் செல்கின்றனர். யாக்கோபின் மக்களுள் யூதாவின் வழிமரபினர் ஒரு சிறப்பு நிலையில் இருப்பார்கள் என்பது ஏற்கனவே முன்குறிக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. யாக்கோபு இறக்குமுன் தனது புதல்வர்களுக்கு ஆசிர் வழங்குகையில் யூதாவைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்:

யூதா! உன் உடன்பிறந்தோர் உன்னைப் புகழ்வர். உன் கை உன் எதிரிகளின் கழுத்தில் இருக்கும். உன் தந்தையின் புதல்வர் உன்னை வணங்குவர். யூதா! நீ ஒரு சிங்கக்குட்டி,

என் மகனே, இரை கவர்ந்து வந்துள்ளாய்! ஆண் சிங்கமென, பெண் சிங்கமென, அவன் கால் மடக்கிப் படுப்பான்; அவன் துயில் கலைக்கத் துணிந்தவன் எவன்? அரசுரிமை உடையவர் வரும்வரையில் மக்களினங்கள் அவருக்குப் பணிந்திடும் வரையில், யூதாவைவிட்டுச் செங்கோல் நீங்காது; அவன் மரபைவிட்டுக் கொற்றம் மறையாது (தொநூ 49:8-10).

தாமிது அரசராக ஆட்சி செய்வதற்கு இன்னும் பல நூற்றாண்டுகள் உள்ளன; ஆனாலும் யூதா அனைத்திலும் முன் நின்று செயல்படுவதை பல நிகழ்வுகளில் பார்க்கிறோம் (காண்கநீத 1:2). யூதா குலத்தினரைத் தொடர்ந்து லேவியர் குலத்தைச் சார்ந்த கேர்சோன் குடும்பத்தினரும் மெராரி குடும்பத்தினரும் திருஉறைவிடத்தின் முக்கியமானப் பகுதிகளைச் சுமந்தவர்களாகச் செல்கின்றனர் (எண் 10:17). திருஉறைவிடத்தைச் சுற்றி இஸ்ரயேல் மக்களில் ஆயிரக்கணக்கானவர்கள் பாதுகாப்பாகச் செல்கின்றனர். திருஉறைவிடத்தைச் சுமந்துவருபவர்களைத் தாக்கி அதில் உள்ள வெள்ளி மற்றும் பொன் போன்ற விலையுயர்ந்த பொருள்களால் செய்யப்பட்ட சட்டங்கள் மற்றும் திரைச் சீலைகளைப் பகைவர்கள் பறித்துவிடாமல் இருப்பதற்காக இந்தப் பாதுகாப்பு வளையம் போடப்பட்டிருக்கிறது. மரத்தினால் செய்யப்பட்ட திருமுன்னிலை அப்பம் வைக்கப்படுகின்ற மேசை போன்ற தூயபொருள்களை கோகாத்தியர்கள் சுமந்து சென்றார்கள். அவர்கள் ரூபன் குலத்தவரின் பின் சென்றுகொண்டிருந்தார்கள். குலங்களின் வரிசையில் கோகாத்தியர்கள் பின்னால் வருவதற்கு ஒரு காரணம் இருந்தது. இஸ்ரயேல் கூட்டமைப்பு பாளையம் இறக்குகின்ற இடங்களில் கோகாத்தியர்கள் தூய பொருள்களுடன் வந்து சேருமுன் திருஉறைவிடத்தைச் சுமந்து செல்பவர்கள் திருஉறைவிடத்தை எழுப்ப முடிந்தது (எண் 10:21). திருஉறைவிடத்தில் வைக்கப்படுகின்ற தூய பொருள்களில் முக்கியமானதும் சிறப்பு வாய்ந்ததுமாக உடன்படிக்கைப் பேழை இருந்தது. இஸ்ரயேல் கூட்டமைப்பின் பாலைவனப் பயணத்தின்போது கடவுள் அவர்களை வழி நடத்துகிறார் என்பதன் அடையாளமாக உடன்படிக்கைப் பேழை அனைவருக்கும் முன் சென்றது (காண்கஎண் 10:33-36). வரிசைக் கட்டமைப்பில் எப்பிராயீம் மற்றும் தாண் குலத்தைச் சார்ந்தவீரர்கள் இறுதியாகச் சென்றார்கள். பின்பக்கத்திலிருந்து இஸ்ரயேல் கூட்டமைப்பை யாரும் தாக்காதவாறு அவர்கள் பார்த்துக்கொண்டார்கள்.

இங்கே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதென்னவென்றால் பலிபீடம் அர்ப்பணிக்கப் பட்டபோது ஒவ்வொரு குலங்களும் காணிக்கைச் செலுத்துவதற்கு இந்தக் கட்டமைப்பைத்தான் பயன்படுத்தினார்கள். யூதா குலத்தின் தலைவர் முதலில் தங்களின் காணிக்கைகளைக் கொண்டுவந்தார். நெப்தலி குலத்தின் தலைவர் இறுதியாக காணிக்கைகளைக் கொண்டு வந்தார் (எண் 7:12, 78). இஸ்ரயேல் கூட்டமைப்பின் இந்தப் போர்


வியூகங்கள் பல சிறப்புகளைக் கொண்டதாக உள்ளது. முதலாவது, அவர்கள் பாளையம் இறக்குவது எகிப்திய பார்வோன்கள் பின்பற்றும் முறையை ஒத்ததாக உள்ளது. குறிப்பாக இரண்டாம் இராம்சேசு பார்வோன் இத்தகைய அமைப்பைப் பின்பற்றினான். இரண்டாம் இராம்சேசு இத்தியர்களுக்கு எதிராகப் போரிடுகையில் தனது படையை நான்கு பிரிவுகளாக, நான்கு படைகளாகப் பிரித்து அவர்களை எதிர்கொண்டார். முதல் பிரிவினர் பல இழப்புகளைச் சந்தித்தபோது, ஏனைய பிரிவுகளில் உள்ள வீரர்கள் முன்வந்து அவர்களுக்கு உதவினர். இரண்டாவதாக, இஸ்ரயேல் கூட்டமைப்பின் மையமாக திருஉறைவிடம் விளங்கியதுபோல பார்வோனின் கூடாரம் பாளையத்தின் நடுவில் செவ்வக வடிவில் கம்பங்களாலும் திரைச் சீலைகளாலும் அமைக்கப்பட்டது. திருஉறைவிடம் அதனைப் பிரதிபலிப்பதாக உள்ளது. எகிப்தியர்களைப் பொறுத்தவரையில் பார்வோன் அவர்களின் அரசனாகவும் கடவுளாகவும் கருதப்பட்டார். இஸ்ரயேல் கூட்டமைப்பின் பாளைய கட்டமைப்பும் இந்த இறையியல் உண்மையை வெளிப்படுத்துகின்றது. அதாவது ஆண்டவர்தான் உங்கள் அரசர் மற்றும் கடவுள்; அவருக்குப் பணி செய்யுங்கள். அவர் உங்களுக்காகப் போரிடுவார் என்ற செய்தியை வெளிப்படுத்துகிறது.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ். cmf



# ஞாயிறு மறையுரை



அருட்பணி.ஸ்டீபன் கஸ்பார்
பங்குத்தந்தை, புனித.திருமுழுக்கு யோவான் ஆலயம், காமலாபுரம், திண்டுக்கல் மறைமாவட்டம்

## பாஸ்கா காலம் 6ம் வாரம் – ஞாயிறு
## 14.05.2023

**திருத்தூதர் பணிகள் 8/5-8, 14-17 - 1 பேதுரு 3/15-18 - யோவான் 14/15-21**

இறை இயேசுவிலே எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே இன்றைய இறைவார்த்தை இயேசு பிரியவிடை கொடுத்த அழுத்தமான அன்புக் கட்டளையை வலியுறுத்திச் சொல்லுகிறது. மேலும் வரவிருக்கும் தூய ஆவியாரின் விழாவுக்குத் திருஅவையைத் தயார்ப்பதாகவும் அமைந்துள்ளது. இன்றைய இறைவார்த்தை நன்மை செய்ய அன்பு செய்ய அழைப்பு கொடுக்கின்றது. அன்பு செய்ய, நன்மை செய்ய வாய்ப்புக் கிடைப்பதைத் தள்ளிப் போடவோ ஒத்திப்போடவோ கூடாது ஏனென்றால் நம் ஆண்டவர் இயேசு ஆவியின் வல்லமை பூண்டவராய் சென்ற இடமெல்லாம் நன்மையே செய்து கொணடு சென்றாரென திருப்பாடல் பணிகள் நூல் 10 ம் அதிகாரம் 38ம் வசனத்தில் காண்கிறோம்.

அன்பான இறைச்சமூகமே, உயிர்த்த கிறிஸ்து அவரது ஆவியாரை நமக்குள் ஊற்றியுள்ளதால் அவர் நமக்குள் தங்கியிருப்பதாக இன்றைய நற்செய்தி 14/7ல் வாசித்தோம். கவிஞர் தாகூர் ஓ, இந்தியரே, இறைவன் உங்களுக்குள்ளே உறைந்திருக்கின்றார் என்கிறார். தூய ஆவியார் நம்மோடு வாழுகிறாரென்று 1 யோவான் 3/24ல் பார்க்கிறோம். இறைவன் ஆவியானவர் உருவில் நம்மில் செயல்படுவரை நம்பும் மனிதனிடம் தடுமாற்றம், அச்சம், கலக்கத்திற்கு இடமில்லை. அந்த ஆவியார் அந்த மனிதனை நன்மை செய்ய அன்பு செய்யவே தூண்டுவார். தீமை செய்ய மனமே வராது.

அன்பான இறைச் சமூகமே, நாம் வாழும் காலம் தூய ஆவியாரின் காலம். நம் அருகில் மிக நெருக்கமாய் தூய ஆவியாரின் உருவில் கடவுள் இருக்கிறார். இம்மானுவேல் கடவுள் நம்மோடு வாழுகிறார், எதையும் செய்ய எனக்கு ஆற்றலை, வலுவைத்

தருகிறாரென பவுல் பிலி 4/13ல் எடுத்துரைக்கிறார்.

உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள் (லூக் 6/27) என்றும் உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள் என்றும் நம் ஆண்டவர் சொல்லுதைக் கேட்கிறோம். பவுல் மேலும் நன்மையால் தீமையை வெல்லுகள் (உரோமையர் 12/21) என்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி பயின்ற வளனார் தன்னாட்சிக் கல்லூரியின் விருதுவாக்கு Pro bono et vero நன்மைக்கும் உண்மைக்கும் என்பதாகும்

அன்புக்குரியவர்களே, நம்மை செய்வோர் அன்பி வேரூன்றி வாழவேண்டும், அன்பு ஒருவரிடம் இல்லை என்றால் அவரால் நன்மை செய்ய முடியாது. அன்பு ஒன்றே நன்மை செய்யும். இயேசுவை வாழும் நாம் அன்பால் பற்றியெறிய வேண்டும். காரணம், அன்பு செய்பவர் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் (3யோவான் 1/11) கிறிஸ்துவை அன்பு செய்பவர் கட்டளைகளைக் கடைப்பிடிப்பர் (யோவான் 14/15ல் இன்று கேட்டோம். நாம் கிறிஸ்துவை அன்பு செய்வோம். அவருடைய நண்பர்களாவோம். கிறிஸ்துவி நண்பர்களென்றால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் நன்மை செய்வதில் அன்பு செய்வதில் நல்ல சமாரியமைனப்போல வாழ்ந்து காட்டுவோம்.

ஏனென்றால் அன்பானவர்களே, நன்மை செய்வதும், பகிர்ந்து வாழ்வதுமே கடவுளுக்கு உகந்த பலியென எபிரேயர் 13/6ல் வாசிக்கின்றோம்.

உலகிலே அன்பை வாழ்ந்து நன்மை செய்தவர்கள் ஏராளம். புனித மாக்ஸ்மிலியன் கோல்பே அன்பில் வேரூன்றியவர். காரணம் அன்னை தெரேசா புனிதை ஆனார். காரணம் இயேசுவைக் கைவிடப்பட்டோரில் வீசியெறிப்பட்ட பிஞ்சு உள்ளங்களில் தொழுநோயாளர்கள் கைம் பெண்களுக்கு கடவுளின் அன்பைத் தந்து மகிழ்ந்தார். மகாத்மா தேசபிா, நெல்சன் மண்டேலா அன்பின் வழியில் அஹிம்சைப் பாதையில் போராடி விடுதலையைச் சுவைத்தார்கள். தொழுநோயாளரின் பணியில் ஈடுபடத் தொழுநோயுற்று இயேசுவின் அன்பில் நன்மை செய்து தொழுநோயாளியாய் மரித்தார் டேமியன் என்ற குரு, புனிதரானார்.

கன்னித்தாய், கடவுளின் ஆவியாரை நம்பி, ஆகட்டும் என்று கூறி கடவுள் விருப்பத்தை ஏற்றதுபோல இருக்கிறவராய் இருக்கிறவர் நானே, உன்னோடு இருப்பேன் என யாவே கடவுள் மோசேக்கு தன் உடனிருப்பைக் காட்டி இஸ்ரயேல் மக்களைக் கானானுக்கு அழைத்து வரப்பணித்ததை ஏற்றதுபோல கடவுளின் உடனிருப்பை நம்பி, அன்பால் நன்மைத்தனத்தால் நம்மை நிறப்பிடுவோம். ஆமென்.






# பாஸ்கா காலம் ஆறாம் ஞாயிறு

தி.ப. 8:5-8, 14-17,
1 பேது. 3:15-18, யோவா. 15:18-21

**14-05-2023**



பா. சேவியர்
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்று, அவரைத் தூயவரெனப் போற்றி மகிழும் அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் இன்றைய பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

தூய ஆவியானவரின் அருட்பொழிவால் நாமனைவரும் புதுப்படைப்பாக மாற்றம் பெற இன்றைய வழிபாடு நம்மை அழைக்கிறது.

கடவுள் மீது அன்பிருந்தால் அவரது கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்வோம் என்ற சிந்தனையையும், இறைவனையும் மற்றவர்களையும் அன்பு செய்ய பரிசுத்த ஆவியின் துணை தேவை என்ற உறுதிப்பாட்டினையும் இன்றைய வழிபாடு வழங்குகிறது.

இயேசு கிறிஸ்து ஆண்டவராகிய தந்தையுள்ளும், நாம் கிறிஸ்துவுக்குள்ளும், கிறிஸ்து நமக்குள்ளும் இருப்பதை இன்றைய வார்த்தை வழிபாடு எடுத்துரைக்கிறது.

இறைவன் மீதும் அடுத்தவர் மீதும் நாம் கொண்டிருக்கும் அன்பிற்கு செயல் வடிவம் கொடுத்து வாழவும், அதன் வழியாக இறையருளை நிறைவாகப் பெறவும் நற்செய்திப் பணியில் இறையன்பை பிரதிபலிப்பவர்களாக வாழவும் வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

தங்கள் வாழ்வில் முக்கியமான முடிவுகளை எடுக்க காத்திருக்கும் இளையோரை இறைவனின் திருக்கரங்களில் ஒப்படைப்போம். திக்கற்றவர்களாய் உங்களை விடமாட்டேன் என்று கூறும் உயிர்த்த ஆண்டவரிடம் அவர்களுக்காக இத் திருப்பலியில் மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

திருத்தொண்டர் பிலிப்பு புறவினத்தாரான சமாரியர்களுக்கு நற்செய்தி அறிவித்ததையும், எருசலேம் திருச்சபை அப்பணியை ஏற்றுக் கொண்டதையும் இன்றைய முதல் வாசகம் குறிப்பிடுகின்றது. பேதுருவும் யோவானும் சமாரியர்களுக்காக இணைந்துச் செபித்து அவர்களுக்குத் தூய ஆவியை பெற்றுத் தந்ததை விளக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்துவின் பொருட்டு துன்புறுவோரை உற்சாகப்படுத்துவதற்காக தூய பேதுரு எழுதிய திருமடலே இன்றைய இரண்டாம் வாசகம். தீமைசெய்து துன்புறுவதைவிட, நன்மைசெய்து துன்புறுவதே மேல் என்பதை வலியுறுத்தி, ஆவிக்குரிய இயல்பு உடையவராய், தீமை செய்பவரை மன்னித்து வாழ்பவராய் வாழ அழைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) இம்மையிலும் மறுமையிலும் இணையில்லாத துணையாக விளங்கும் அன்புத் தந்தையே இறைவா! தாங்கள் மேற்கொள்ளும் நற்செய்திப் பணியில் இறையன்பையும் பிறரன்பையும் பிரதிபலித்து வாழும் எம் திருத்தந்தை. ஆயர்கள், எம் பங்குத் தந்தையர், அருட்பணியாளர் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்களது சொல், செயல், சிந்தனை அத்தனையும் கிறிஸ்துவுக்கு சாட்சியம் பகர்வதாய் அமைந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை வேண்டுகிறோம்.

2) காக்கின்றவராய் கரம் பிடித்து வழி நடத்துபவராய், கருணை உள்ளம் கொண்டவராய் விளங்கும் அன்பு இறைவா, எங்கள் வாழ்வில் வரும் துன்ப துயரங்களை பிறர் நலனுக்காக பொறுமையுடன் ஏற்று, அவற்றை உமக்கு ஒப்புக்கொடுத்து வாழவும், துன்புறும் மக்களுக்கு என்றும் துணை நிற்கும் மனப்பக்குவத்தை பெற்று வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) இருக்கின்றவராக இருக்கின்ற அன்பு இறைவா, எம் பிள்ளைகள் பள்ளிப் படிப்பை வெற்றிகரமாக முடித்துவிட்டு கல்லூரிப் படிப்பை தொடங்கும் நிலையிலும், கல்லூரிப் படிப்பை முடித்தவர்கள் தங்கள் வாழ்வை தீர்மானிக்கும் பணியினை மேற்கொள்ளும் நிலையிலும் காத்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் உமது வழியும், உண்மையும், வாழ்வும் நானே என்ற வார்த்தைகள் ஒளிமயமான உண்மையான வாழ்வுக்கு அவர்களை அழைத்துச் செல்ல உதவ வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) உலர்ந்த எலும்புகளுக்கு உயிர் அளித்து புதுவாழ்வு தந்த தந்தையே இறைவா, எம் பங்கில் உள்ள குழந்தைகளை நிறைவாக ஆசீர்வதியும். கோடைகால சிறப்பு மறைக்கல்வி வகுப்புகளை அவர்கள் ஆர்வமுடன் பயன்படுத்தி தாங்கள் கற்ற மறைப் போதனைகளை வாழ்வாக்கிடவும், அதனையே வாழ்வின் வரிச்சட்டமாக கொண்டாடிடவும் அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



திருமதி.மார்க்ரேட் பாண்டியன்
கவுண்டம்பாளையம்,கோவை

# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

மகிழ்ச்சியாய் இருப்பவர்களால் மட்டுமே
பிறரை மகிழ்ச்சிப்படுத்த முடியும் – ஆன் ஃபிராங்

இருளில் ஒளியைத் தேடுங்கள்– அரிஸ்டாட்டில்

தொடங்காதவரை அனைத்தும் கடினம்–டோனி ராபின்ஸ்

பிறருக்காக வாழும் வாழ்க்கையே
சிறந்த வாழ்க்கை– ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

நீ பயப்படும் காரியத்தை முதலில் செய்
பயத்தின் மரணம் நிச்சயம்–ரால்ஃப் வால்டோ எமர்சன்

இப்போது கவலைப்படும் அனைத்தையும்
எதிர்காலத்தில் நினைத்துப் பார்க்கும்போது
இதற்காகவெல்லாமா கவலைப்பட்டோம்?
என சிரிக்கத்தோன்றும்

அறிவைவிட கற்பனை மிகச் சிறந்தது
–ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

கெட்டவன் சாகும்போது கஷ்டப்படுவான்
நல்லவன் சாகுற வரைக்கும் கஷ்டப்படுவான்

தன்னைவிட தகுதியற்றவரையும்
உயர்வாய் மதிப்பவரே உயர்ந்தவர்



# திருப்பலி வாசகங்கள்

## பாஸ்கா மே வாரம்

## 14.05.2023 முதல் 21.05.2023

### 14.05.2023 பாஸ்கா காலம் 6ம் வாரம் - ஞாயிறு

திருத்தூதர் பணிகள் 8/5-8, 14-17

1 பேதுரு3/15-18

யோவான் 14/15-21

### 15.05.2023 - பாஸ்கா 6ம் வாரம் திங்கள்

திருத்தூதர் பணிகள் 10/11-15

யோவான் 15/26-16/4

### 16.05.2023 - பாஸ்கா 6ம் வாரம் செவ்வாய்

திருத்தூதர் பணிகள் 16/22-34

யோவான் 16/5-11

### 17.05.2023 - பாஸ்கா 6ம் வாரம் புதன்

திருத்தூதர் பணிகள் 17/15, 22-16/1

யோவான் 16/12-15

## 18.05.2023 - பாஸ்கா 6ம் வாரம் வியாழன்

திருத்தூதர் பணிகள் 18/1-8

யோவான் 16/16-20

## 19.05.2023 - பாஸ்கா 6ம் வாரம் வெள்ளி

திருத்தூதர் பணிகள் 18/9-18

யோவான் 16/20-23

## 20.05.2023 - பாஸ்கா 6ம் வாரம் சனி

திருத்தூதர் பணிகள் 18/23-28

யோவான் 16/23-28

## 21.05.2023 - ஞாயிறு

## ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழா

திருத்தூதர் பணிகள் 1/1-11

எபேசியர் 1/17-23

மத்தேயு 28/16-20



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 45

அன்பும் அறமும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது



### குறள் விளக்கம்

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

### சிந்தனை

தான் சந்திக்கும் மனிதர்களின் தன்மை கண்டு நொந்த மனிதன், கடவுளிடம் ஒரு வரம் கேட்டான். அன்பு, புரிதல், அமைதி, பண்பு எல்லாம் கொண்ட ஒரேயொரு மனிதனைக் கொடு என்றார். கடவுள், முடியாது என்றார். உங்களால் முடியாததும் உண்டா என்ன? என்று திகைத்த மனிதனிடம் நான் உருவாக்குவதை விட இந்த குணங்கள் கொண்ட மனிதனாக நீயே உருவாகிவிடு. அப்படி உருவானால் இந்த குணங்கள் எல்லோரிடமும் இருப்பதை கண்டுபிடிப்பாய் என்றார். ஏனெனில் உன்னிடம் இருப்பதே உலகத்தில் என்றார்.

இல்வாழ்க்கை என்னும் இந்த ஐந்தாவது அதிகாரத்தில் வள்ளுவர் கணவன் மனைவி என இருவரும் தனித்தனியே என்ன செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. இல்லறம் என்று சொன்னால் இருவரும் இணைந்து அறம் செய்வதே இல்லறம் என்கிறார். எனவே இல்லறத்தார் என்னென்ன செய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட அவர் இப்பொழுது அவர்களுக்கு உரிய பண்பை குறிப்பிடுகின்றார்.

இல்லறத்தாருக்கென்று ஒரு பண்பு இருக்கின்றது. அது அன்பு செய்தல் ஆகும். குடும்பத்தினரையும், குடும்பத்தை சார்ந்தவர்களையும், பிற மாந்தரையும் அனைவரையும் அன்பு செய்வதாகும். உழைப்பால் பெற்ற பொருளைக் கொண்டு பிறருக்கு உதவுவதும், அனைவரையும் அன்பு செய்வதும் ஆகிய இந்த இரண்டு குணங்கள் தான் இல்லறத்தாரின் சிறப்பான குணங்கள் என்கிறார்.

வேதாகமம், அறிவிலிகளே, செயலற்ற நம்பிக்கை பயனற்றது என நான் எடுத்துக்காட்ட வேண்டுமா? யாக் 2:20 என்கிறது.

அன்பும் தர்மமும் இணைந்து செல்ல வேண்டும். இறைநம்பிக்கையும் அதாவது விசுவாசமும் நற்செயலும் இணைந்து செல்ல வேண்டும். செயல்கள் இல்லாத விசுவாசம் பயனற்றது ஆகும். இது போன்று தான் இல்வாழ்க்கையிலும் அன்பும் அறனும் இணைந்து செல்ல வேண்டும்.



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm



திரு.ஜெ.அம்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்

# நலம் தரும் இயற்கை வளம்



நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.
இன்றைய நலத்தகவல்.!
வயிறே நோய்களின் வரவேற்பறை
சர்க்கரை நோயா? குணமாக்க முடியாது;
கட்டுப்படுத்தலாம்.
ஆனால் சாகும் வரை மருத்துவம் பார்க்க வேண்டும்...
இரத்த அழுத்தமா? குணமாக்க முடியாது;
கட்டுப்பாட்டில் வைக்கலாம்.
அதற்குத் தினந்தோறும் மருந்துகளை நிறுத்ததாமல் சாப்பிட வேண்டும்.
ஆஸ்துமாவா? குணமாக்க முடியாது;
அதன் தீவிரத்தை வேண்டுமானால் குறைக்க முடியும்.
ஆனால் இறுதி மூச்சு நிற்கும் வரை மருந்துகளின் துணையோடுதான்.....
மூட்டுவலி, இடுப்பு வலி, தலைவலி, புற்று நோய், என்று எந்த நோய் வந்தாலும்
குணமாதல் என்பது இன்று பொய்யாகிப் போனது.
அலோபதி மருத்துவமோ,
ஹோமியோபதி மருத்துவமோ,
சித்த மருத்துவமோ
அல்லது ஆயுர் வேதமோ
எதுவாக இருந்தாலும்
வாழ்நாள் முழுவதும் மருத்துவம் பார்க்கும் பரிதாப நிலைக்கு வந்துவிட்டோம்.
இந்த நிலைக்குக் காரணம்
மருத்துவ முறைகள்தான் என்று குறை கூறும் முன்னர்
முதலில் உங்களை நீங்கள் சரிசெய்து கொள்ளுங்கள்.
நோய் வருவதற்கும்
நோய் உடலில் தங்கி நாட்பட்ட நோயாக மாறுவதற்கும்

பின்னர்
அதுவே கொடுநோயாக மாறுவதற்கும் காரணம்
நீங்கள்தான்.
உங்களை நீங்கள் சரி செய்யாமல்
எந்த வைத்தியம் பார்த்தாலும் நோய் குணமாகாது.
என்றைக்குப் பசியை உணராமல்
கடிகாரத்தில் மணி பார்த்துச் சாப்பிட ஆரம்பித்தீர்களோ
அன்றைக்கே நீங்கள் சர்க்கரை நோயாளி ஆகிவிட்டீர்கள்.
பசி என்ற உணர்வே எச்சிலைச் சுரக்க வைக்கும்
எச்சில் சுரந்தால்தான் வயிற்றில் ஜீரண நீர்கள் சுரக்கும்
ஜீரணம் நன்றாக நடைபெறும். கணையமும் நன்கு வேலை செய்யும்.
கணையம் நன்கு வேலை செய்தால்தான்
இன்சுலின் சுரக்கும்.
இன்சுலின் சுரந்தால்தான்
உடலானது சக்தியை நன்கு பயன்படுத்த முடியும்.
இன்சுலின் சுரக்கவில்லை என்றால்
சக்தியானது உடலால் உபயோகப்படுத்த முடியாமல் கழிவுகளாகத் தேங்கும்.
இந்தக் கழிவுகள் உடலில் எங்கெல்லாம் தேக்கம் கொள்கிறதோ
அங்கெல்லாம் நோயாக மாற்றம் அடையும்.
அதையே நீங்கள் வெவ்வேறு பெயர் வைத்து விதவிதமான நோய்களாக
அழைக்கிறீர்கள்.
பெயர் எப்படி வைத்துக்கொண்டால் என்ன?
நோய் என்பது ஒன்றுதான்.
கழிவுகளின் தேக்கத்தால் சக்தி பரிமாற்றத்தில் ஏற்படும் குறைபாடே நோயாகும்.
உதாரணத்திற்கு
நுரையீரலில் கழிவுகளின் தேக்கமே
சளியாக, இருமலாக, ஆஸ்துமாவாக மாற்றம் அடைகிறது.
கணையம் இன்சுலினைச் சுரக்காததால் தேங்கும் கழிவுகளே
தினம்தோறும் நீங்கள் அனுபவிக்கும்
கண் பார்வை பிரச்சினை
காது கேட்பதில் பிரச்சினை
தலைவலி, உடல்வலி
மூட்டுவலி, அரிப்பு,
கை கால் மரத்துப் போதல்,
கை கால் விரல்களில் எரிச்சல்,
தோல் நோய்கள், படபடப்பு,
தலைசுற்றல், அதிகமான தாகம்,
அதிகமான பசி, மயக்கம்
என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

உடலில் தேங்கும் கழிவுகளை உடலை விட்டு நீக்கினால்
நோயானது தானே குணமாகிவிடும்.
அதை விடுத்து எந்த வைத்தியம் பார்த்தாலும்
நோயின் வெளிப்பாடுகளை
(நோயை அல்ல)
வேண்டுமானால் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும்.
ஆனால்
அதற்கும் ஆயுள்வரை மருத்துவம் என்ற கதைதான்.
இதிலிருந்து மீள்வதற்கு உங்கள் வாழ்க்கை முறையை மாற்றுங்கள்.
அனைத்து நோய்க்கும் மூல காரணம் வயிறுதான்.
அதைச் சரி செய்யுங்கள்.
வயிறு நன்றாக இருந்தால்
உடலில் கெட்ட சக்திகள் (கழிவுகள்) தேங்காது.
கழிவுகள் தேங்கவில்லை என்றால் என்றும் ஆரோக்கியம் தானே.
வயிறு நன்றாக இருக்க வேண்டுமானால்
கடிகாரத்தைப் பார்த்து
காலை 8 மணி, மதியம் 1 மணி, இரவு 8 மணி என்று சாப்பிடுவதை நிறுத்துங்கள்.
பசி இருக்கிறதா? இல்லையா? என்று பாருங்கள்.
பசி இருந்தால் மட்டுமே உணவு உண்ணவேண்டும்.
தாகத்தை உணர்ந்து தண்ணீர் அருந்துங்கள்.
அதே போல் தூக்கம்
குறிப்பாக
இரவு 11 மணி முதல் அதிகாலை 3 மணி வரை நல்ல தூக்கம் ஆரோக்கியத்திற்கு அவசியம்.
இரசாயனங்களின் உதவியோடு விளைந்தவை
வேதியியல் மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டவை
செயற்கை உணவுகள் என்று எதுவாக இருந்தாலும்
உணவின் இயற்கைத் தன்மைக்கு வேட்டு வைக்கும் விடயத்தை விலக்கி
நீங்கள் உண்ணும் உணவில் முடிந்த அளவு
இயற்கைத் தன்மை உள்ளது என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்
இரசாயனங்கள் உடலுக்கு என்றைக்குமே தீமைதான் செய்யுமே ஒழிய
நன்மை செய்யாது.
அது எந்த ரூபத்தில் இருந்தாலும் சரி.
உடலானது நாம் உட்கொள்ளும்
(காற்று, உணவு, நீர்) போன்றவற்றிலிருந்து
இயற்கையான சக்தியை மட்டுமே எடுத்துக்கொள்ளும்.
இயற்கைக்கு மாறாக உள்ளவற்றைக் கழிவாகவே ஒதுக்கித் தள்ளும்.
இந்தக் கழிவுகள் பின்னர் ஒன்று சேர்ந்து வெளியேற முடியாமல்
நோயாக மாறும்.

உங்கள் நோய் எதுவாக இருந்தாலும்
குணமாவது உங்கள் கையில்தான் இருக்கிறது.
நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்
தாகம், பசி
(இரசாயனங்கள் இல்லாத உணவு)
தூக்கம் அறிந்து நடந்தால் போதும்.
நோய் என்ற பேச்சுக்கே இடமில்லை.
அப்படியெல்லாம் என்னால் இருக்க முடியாது
கண்ணில் கண்டதை எல்லாம் சாப்பிடுவேன் என்றால்
வயிறுதான் நோய்களின் வரவேற்பறையாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

நன்றி எம் உறவுகளே..!
என்றும் உங்கள் அன்பு சகோதரன்.

ஜே. அன்புரோஸ்.
நலநெறியாளன்
9360456063